**Revised**

செய்தி வெளியீடு எண்: 1125 நாள் : 23.12.2010.

**நெற் பயிர்களுக்கு வழங்கப்பட்டதைப்போல**
**விவசாயிகள் கோரிக்கையை ஏற்று,**
**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிற பயிர்களுக்கும்**
**கூடுதல் இழப்பீட்டுத் தொகை!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

தமிழகத்தில் அண்மையில் பெய்த பெருமழையில் சேதமடைந்த நெற்பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை 8 ஆயிரம் ரூபாய் என்பதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் 20.12.2010 அன்று ஆணை பிறப்பித்திருந்தார்.

மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த பிற பாசனப் பயிர்களுக்கும் மற்றும் மானாவாரி பயிர்களுக்கும் நிவாரணத் தொகையை மேலும் அதிகப்படுத்தி வழங்கிட வேண்டுமென விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அக்கோரிக்கைகளை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து, நெற்பயிர்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்டதுபோல, மற்ற பாசனப் பயிர்களுக்கும் **எக்டேர் ஒன்றுக்கு 4000 ரூபாய் என்றிருந்ததை 7500 ரூபாயாகவும், மானாவாரிப் பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 2000 ரூபாய் என்றிருந்ததை 4000 ரூபாயாகவும்** உயர்த்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார் .

---

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.